# வலிகாமம் மேற்கு எண்ணிம வலைவாசல் செயற்றிட்டம்

| | |
|---|---|
| செயற்றிட்ட தலைப்பு | வலிகாமம் மேற்கு எண்ணிம வலைவாசல் செயற்றிட்டம் |
| செயற்றிட்ட எண் | NF/PG/2020/0069 |
| செயற்றிட்ட இடம் | யாழ்ப்பாணம் |
| செயற்றிட்ட காலம் | 2019 - 2020 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | வலிகாமம் மேற்கு பிரதேச சபை |
| முக்கிய பங்குத்தாரர்கள் | கஜந்தன் நவரட்னராஜா<br>நூலக நிறுவனம் |
| பாதீடு (Budget) | **75,000.00** |

## நூலக நிறுவனம்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

## செயற்றிட்டச் சுருக்கம்

வலிகாமம் மேற்கு பிரதேச சபை அதனது பிரதான நூலகத்தில் ஆசியா அறக்கட்டளையின் (Asia Foundation) நிதியுதவியுடனும் சபையின் சொந்த நிதிப்பங்களிப்புடனும் மின்னூலகச் செயற்றிட்டம் ஒன்றினை நடைமுறைப்படுத்த விளைந்தது. இதற்கான முன்மொழிவு தயாரிப்பில் நூலக நிறுவனம் குறிப்பிடத்தக்க பங்களிப்பு வழங்கியிருந்தது. அத்துடன் தொடர்ந்தும் செயற்றிட்ட அமுலாக்கலில் தொழினுட்ப ஆலோசனை வழங்கி வருகின்றது.

இச்செயற்றிட்டத்தின் செயற்பாடுகளில் வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு அதன் நூலகத்தின் செயற்பாடுகளையும் உள்ளடக்கி எண்ணிம கற்றல் வலைவாசல் ஒன்றினை உருவாக்கலும் அப்பிரதேசம் சார்ந்த அறிவு வளங்களை சேகரித்து எண்ணிமப்படுத்தி பதிவேற்றுதலும் இச்செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட்டன.

## அறிமுகமும் பின்புலமும்

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு அதன் நூலகத்தின் செயற்பாடுகளையும் உள்ளடக்கி எண்ணிம கற்றல் வலைவாசல் ஒன்றினை உருவாக்கலும் அப்பிரதேசம் சார்ந்த அறிவு வளங்களை சேகரித்து எண்ணிமப்படுத்தி பதிவேற்றுதலும் முக்கிய லிடயமாகக் கொள்ளப்பட்டு அது சார்ந்த செயற்பாடுகளில் நூலக நிறுவனம் பதினைந்து ஆண்டுகால முன்னநுபவம் கொண்டுள்ள்மையினால் நூலக நிறுவனத்துடன் இணைந்து இச்செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது. அத்துடன் அதனது வலைத்தளங்களில் வலிகாமம் மேற்கு பிரதேசம் சார்ந்த பெருமளவு அறிவு வளங்கள் ஏற்கனவே சேகரித்து எண்ணிமப்படுத்தி பதிவேற்றப்பட்டுள்ளன. மேலும் குறிப்பிட்ட செயற்பாடுகளில் நிபுணத்துவத்திற்கு ஆசியா அறக்கட்டளை (Asia Foundation) நிறுவனத்தால் பரிந்துரைக்கப்பட்ட ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகவும் நூலக நிறுவனம் உள்ளது. ஆகவே இச்செயற்பாடுகளை தொழில்சார் தரத்துடனும் வினைத்திறனுடனும் நிறைவேற்ற நூலக நிறுவனம் முன்வந்து பயிற்சிகள் வழங்கி ஒத்துழைப்பு வழங்கியது.

## இலக்குகளும் நோக்கங்களும்

- கட்டற்ற பன்மொழி உள்ளடக்க மேலாண்மை மென்பொருள் (Content Management System) ஒன்றை நிறுவல் (கட்டமைப்பு, வடிவமைப்பு).
- பிரதேச சபை உள்ளடக்கங்களை உள்ளீடு செய்ய வழிகாட்டல் வழங்குதல்.
- வலிகாமம் பிரதேச சபை நூலகத்தின் நூற்பட்டியலை இந்தத் தளம் ஊடாக இணையம் ஊடாக அணுக்கத்துக்குக் கொண்டுவருதல்.
- வலிகாமம் பிரதேச சபை நூலகர்கள் நூலக வழிகாட்டல்களை உருவாக்கக் கூடியவாறான இணைய வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- வலைத்தள உள்ளடக்க பராமரிப்புத் தொடர்பான உள்ளடக்கம் வழங்கல்.
- வலைத்தளத்தை 2 ஆண்டுகள் புரவல் செய்து (hosting), பராமரித்தல் (maintenance).
- பிரதேச சபை நூலகங்கள் வசமுள்ள மற்றும் அவற்றின் மூலம் சேகரிக்கப்படும் (developing local collections) பிரதேசம் சார்ந்த அறிவு வளங்களை எண்ணிமப்படுத்தல் (digitization).
- எண்ணிமப்படுத்தப்பட்ட, எண்ணிம வடிவில் உள்ள பிரதேசம் சார்ந்த அறிவு வளங்களை வலைத்தளத்தில் பதிவேற்றுதல் (uploading and organizing digitized collections).

## செயற்பாடுகள்

- வலிகாமம் பிரதேச சபை நூலகத்திற்கு இணைய வசதியைப்பெறுவதற்கான பயிற்சிகளை வழங்குதல்.
- கணணி வசதிகளை ஏற்படுத்தி அதற்கான ஆலோசனைகளை வழங்குதல்.
- மீதரவு தாள் பதிதல், இற்றைப்படுத்தல் தொடர்பான பயிற்சிகள் வழங்குதல்

## அடைவுகள்

- வலிகாமம் பிரதேச சபை நூலகத்திற்குச் சென்று இணைய வசதியைப் பெறுவதற்கு அமைப்பு முறையை உருவாக்க தொழில் நுட்ப உள்ளீடுகளையும் ஆலோசனைகளையும் வழங்கியமை.
- வலிகாமம் பிரதேசசபை நூலகர்கள் நூலக வழிகாட்டல்களை உருவாக்கக் கூடியவாறான இணைய வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான கஜந்தன் நவரட்னராஜா அவர்களின் பங்களிப்புடன் கணணி வசதிகளை பரதன் அவர்களுடன் இணைந்து செயற்படுத்தியமை.
- வலிகாமம் பிரதேச சபை நூலகருக்கான எண்ணிப்படுத்தல் மற்றும் மீதரவு தாள்பதிதல் தொடர்பான பயிற்சிகள் வழங்கியமை.

## எதிர்கொண்ட சவால்கள்

.

- குறித்தகால அளவில் செயற்றிட்டம் முழுமைப்படுத்தப்படவில்லை.
- கொவிட் 19 காரணமாக தொடர்பாடலில் ஏற்பட்ட தாமதம் செயற்றிட்டத்தினை புரிந்துணர்வு அடிப்படையில் தற்காலிகமாக நிறுத்த வேண்டி ஏற்பட்டது.
- செயற்றிட்டம் முழுமைப்படுத்தப்படாததால் செயற்றிட்டம் இடையில் நிறுத்தப்பட வேண்டியிருந்தது.

## பாதீடு

| **Valikamam East Pradeshiya sabha** | |
|---|---|
| வரவுகள் | |
| 05.11.2019 | 25,000.00 |
| 06.12.2019 | 30,000.00 |
| 07.01.2020 | 10,000.00 |
| 21.01.2020 | 10,000.00 |
| **மொத்த தொகை** | **75,000.00** |

## கற்றல்களும் பரிந்துரைகளும்

- எதிர்வரும் காலங்களில் வலைத்தள உள்ளடக்க பராமரிப்புத் தொடர்பான உள்ளடக்கம் வழங்கல் / பயிற்சி அளித்தல்

- வலைத்தளத்தை 2 ஆண்டுகள் புரவல் செய்து (hosting), பராமரித்தல் (maintenance) அது தொடர்பான பயிற்சி வழங்குதல்
- பிரதேச சபை நூலகங்கள் வசமுள்ள மற்றும் அவற்றின் மூலம் சேகரிக்கப்படும் (developing local collections) பிரதேசம் சார்ந்த அறிவு வளங்களை எண்ணிமப்படுத்தல் (digitization) சார்ந்த முன்மொழிவுகளை பரிந்துரை செய்தல்.
- எதிர்வரும் காலங்களில் இவ்வாறு இடைநிறுத்தப்பட்ட செயற்றிட்டங்களை முழுமைபடுத்துவதற்கான முன்மொழிவுகளைக ஆலோசனைகளை வழங்கமுடியும்.

**பின்னூட்டல்கள்**

**https://tinyurl.com/3zm727bn**